

பெஞ்ஜல் புயல் மற்றும் தென்பெண்ணையாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட காரணத்தினால் கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிங்கிரிகுடி, மேல்அழிஞ்சிபட்டு, திருப்பணாம்பாக்கம், அழகியநத்தம், கிளிஞ்சிக்குப்பம் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் மற்றும் கடலூர் மாநகராட்சி குறிஞ்சி நகர், தட்சிணாமூர்த்தி நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அய்யப்பன் எம்.எல்.ஏ ஏற்பாட்டின் பேரில் ரெட்டிச்சாவடியில் தனியார் மண்டபத்தில் உணவு சமைக்கப்பட்டது. இந்த நிலையில் ஊராட்சிகள் மற்றும் மாநகராட்சி பகுதியிலுள்ள நகர்களை சேர்ந்த 12000 பேருக்கு உணவு அனுப்பும் பணியை வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார். ஊரக வளர்ச்சி துறை செயலாளர் ககன்தீப்சிங் பேடி, ஆட்சியர் சி.பி.ஆதித்யா செந்தில்குமார், அய்யப்பன் எம்.எல்.ஏ. ஆகியோர் தனியார் மண்டபத்தில் தங்கி இருந்த பொதுமக்களுக்கு உணவு வழங்கினார்கள். இதில் கூட்டுறவு சங்க தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சுதாகர், ஜெயமூர்த்தி, வெங்கடேசன், ஊராட்சி மன்ற தலைவர் அழகு, நிர்வாகிகள் ராம்குமார், வசந்த், பிரகாஷ், பரத் ரெட்டியார், ரவிராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கே.கே.செல்லப் பாண்டியன் தலைமை! ஆ.செந்தில் வரவேற்புரை! - துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட கருத்தரங்கம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச. 6-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இனந்தலைவர் உதயநிதி ஸ்டாலின்அவர்களின் பிறந்தநாள் விழா திராவிட கருத்தரங்கம் இன்று (06.12.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியளவில் நகர்மன்ற வளாகம், புதுக்கோட்டையில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் தலையில் நடைபெறுகிறது.

மாநகர செயலாளர் ஆ.செந்தில் வரவேற்புரையாற்றுகிறார் எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், திலகவதி செந்தில், த. சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம்,

பி.டி.அரசக்குமார், அரு. வீரமணி, புதுக்கோட்டை விஜயா, வி.என்.மணி, சுப. சரவணன், டாக்டர்.எஸ்.ஆர்.அண்ணாமலை, செ. அசோக் பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ். கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, க.மதியழகன், கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம்,

ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், தவ.பாஞ்சாலன், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், பூங்குடி எம்.சிவக்குமார், வண்ணை அரங்கநாதன், டாக்டர் அஞ்சுகம் பூபதி, கார்த்திகேயன் வேல்சாமி, அ.ரெத்தினம், ப. ரெங்கராஜன் மா.மணிவேலன், முத்தழகு பழனிவேலு, சேட்டு (எ) ஷாஜகான், ஏ.இராமலிங்கம், ஆ.ஜேம்ஸ், மு.ராஜதுரை, மு.க.அறிவுடைநம்பி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச்செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் கலை. கதிரவன் கருத்தரங்கை துவங்கி வைக்கிறார். பொது தலைப்பு இளந்தலைவரின் இலட்சிய பயணம். இயக்கத்தில் இளைஞரணி செயலாளர் என்ற தலைப்பில் கழக இளம் சொற்பொழிவாளர் நாமக்கல் ம.மோகநிதி, ஆட்சியில் துணை முதலமைச்சர் என்ற தலைப்பில் தஞ்சாவூர் ஜோ.லியோனி விஷ்வா, கருத்தியலில் திராவிட இயக்கத்தின் எதிர்காலம் என்ற தலைப்பில் புதுக்கோட்டை சோ.தமிழ் இனியன் ஆகியோர் கலந்து கொண்டு பேசுகின்றனர்.

மேலும் ஒன்றிய கழக செயலாளர் கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், என்.சேட்டு, எம்.பரமசிவம், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, வெ.முத்துக்கிருஷ்ணன், மா.தமிழ் அய்யா, ஓ.எஸ். வெங்கடாச்சலம், அ. இளங்குமரன், குளவாய்ப்பட்டி சி.சண்முகம், கே.பி.அய்யப்பன், ஆர்.ஆர்.சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், ராப்பூசல் செந்தில்குமார், ஆர்.செல்லத்துரை, சி.ஆர்.வி. சித்ரா, பேரூர் கழக செயலாளர்கள் வை. விஜயக்குமார், உ.முருகேசன், ப. அண்ணாத்துரை, எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா, ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், பேரூராட்சி தலைவர்கள் பாண்டிச் செல்வி கே.ஆர்.என். போஸ், காமு மு.பி.மணி, பி.சின்னையா, மாலா ராஜேந்திர துரை, லதா இளங்குமரன், கல்யாணி ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, சித்ரா ரவிச்சந்திரன், த.செல்வம், ராஜேஸ்வரி செந்தில்குமார், சாந்தி தங்கச் சிங்கம், கை. பழனிச்சாமி, ஜெய மீரா ரவிக்குமார், வி.சகுந்தலா வைரவன், எம்.ஏ.எம். இம்தியாஸ், இ.செந்தில் ராஜா, எம்.நைனா முகம்மது, கழக முன்னோடிகள் க.ரெங்கராஜ், மு.பி.மணி, வை.கோ. ராஜன், மு.கலியமூர்த்தி, வழக்கறிஞர் திருஞான சம்பந்தம், க.நைனா முகம்மது, எம்.எம்.பாலு, எஸ்.சின்னராசு, ஆர்.பாலகிருஷ்ணன், ராம.செல்வராஜ், கறம்பக்குடி ஜெகநாதன், ராய.முத்துக்குமார்,

மாவட்ட அணிகள் அமைப்பாளர்கள் உரக்கடை எம்.கருப்பையா, மஜீத் முபாரக், கே.எஸ்.ச. இளையச்சூரியன், டி. சூசைராஜ், கே.கணபதி, புத்தாம்பூர் எம்.சுப்பையா, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், அ. பிரபா, செந்தாமரை பாலு, டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, பொன்.பாரிவள்ளல், வே.ராஜேஷ், வி. என்.எம்.பாலு, வி.ஜி.ஆர். மணிவண்ணன், தவசு மணி, ஆர்.டி.ஆர்.ராமசாமி, க.கவிவேந்தன், எம்.ராஜா,

சி. அரங்கநாயகம், எஸ்.வி. ஆர்.ஜெய் ஸ்டாலின், வழக்கறிஞர் என்.வீரையா, கா. இளவரசன், எம்.வேலுச்சாமி, மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன் முத்துசாமி, விளாப்பட்டி எம். சிவா, முகம்மது அன்சாரி பாஷித், மாவட்ட அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள் மலையூர் ஆர். ராமசாமி, ஜெ.அஸ்ரப் அலி, மணிமொழி மனோகரன், கி.சுப்பிரமணியன், எம்.காதர் கனி, கமலா செல்வம், சுமோ பாலு, ஏ.வெற்றிச் செல்வன், வை.ஆதிமூலம், வழக்கறிஞர் ரவிச்சந்திரன், கீரை. ஆ.ராஜேந்திர சோழன், கவிஞர் மரிய எட்வின், ஏ. சுந்தர்ராஜ், என். ஆர்.பரிமளம், ஏ.பி.ஆர் ராஜாங்கம், கே.பி.எஸ் மகேந்திரன், மெஸ் மூர்த்தி, ராஜகோபாலபுரம் ஆர். செந்தில்குமார், ராம. பால சுப்ரமணியன், எஸ்.சின்னையா, டாக்டர் அமானுல்லா, எம்.ஆர் அன்பழகன், காட்டாத்தி எம். குழந்தை, பா.ஹரிகரன், வே.கோவிந்தன், டாக்டர் தவ.பா.உதயசூரியன், டாக்டர் பிரபாகர் தாஸ், நாகேந்திரன், சி.வெங்கடேசன், தரணி ரமேஷ், மலையூர் சந்திரசேகர், ப.தங்கமணி, கே.மகேந்திரன், ராஜுவ் உத்திராபதி, பி.விஸ்வ நாதன், ஜெனி இளங்கோ மற்றும் அணிகளின் துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய,பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்னர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பொருளாளர் துணை மேயர் எம். லியாகத் அலி நன்றி கூறுகிறார்.



கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம்முள்ளிகிராம்பட்டு பகுதியில் ஃபெஞ்சல் புயல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் பார்வையிட்டு பொது மக்களுக்கு ஆறுதல் கூறினார்.உடன் நெல்லிக்குப்பம் நகர மன்ற தலைவர் ஜெயந்தி நடராஜன், நகர கழக செயலாளர் மணிவண்ணன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி, ஸ்ரீ செல்வி திருமண மஹாலில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துவத்துறை சார்பில் நடைபெற்ற கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 04.12.2024 அன்று கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், அறந்தாங்கி மாவட்ட சுகாதார அலுவலர் மரு.விஜயகுமார், ஒன்றியக்குழுத் தலைவர்கள் திருமதி.வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறையில் அரசு பள்ளியில் 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ-மாணவிகள் பயன் பெறும் வகையில் தேர்வை வெல்வோம் வினா-விடை புத்தகங்களை தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமது சொந்த செலவில் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பள்ளி ஆசிரிய பெருமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### ஆ.ராசா எம்.பி., அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோவி.செழியன், டி.ஆர்.பி.ராஜா, சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

# தஞ்சை மண்டல தி.மு.க மருத்துவ அணி சார்பில் சமூகநீதி - பகுத்தறிவுப் பாசறை கூட்டம்!

## மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர்,டிச.6-

தஞ்சை மண்டல மருத்துவர் அணி சார்பில் நடைபெறும் சமூகநீதி மற்றும் பகுத்தறிவு பசறை கூட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொள்ள வேண்டி தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: தஞ்சை மண்டல தி.மு.க மருத்துவர் அணி சார்பில் சமூகநீதி மற்றும் பகுத்தறிவுப் பாசறை கூட்டம் (07.12.2024 -சனிக்கிழமை) மாலை 4.30 மணியளவில் நாஞ்சிக்கோட்டை காவேரி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன், தொழில் முதலீட்டு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, பிற்படுத்தப்பட்டோர் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், கழக மருத்துவர் அணித்தலைவர் மரு.கனிமொழி என்.வி. என்.சோமு எம்.பி, கழக மருத்துவர் அணிச் செயலாளர் மரு.எழிலன் நாகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

இக்கூட்டத்திற்கு தஞ்சை மத்திய மாவட்டத்திற்குட்டப்பட்ட முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட மற்றும் மாநகர அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### குன்னம் தொகுதி செந்துறையில் அரசுப் பள்ளியில் படிக்கும்

# 1708 மாணவ, மாணவியர்களுக்கு 'தேர்வை வெல்வோம்' வினா-விடை புத்தகம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், டிச. 6-

அரியலூர் மாவட்டம் செந்துறை ஒன்றியம் குன்னம் தொகுதியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 10 ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ-மாணவிகள் பயன் பெறும் வகையில் தேர்வை வெல்வோம் வினா விடை புத்தகங்களை தமிழ்நாடு அரசு போக்குவரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தமது சொந்த செலவில் பல ஆண்டுகளாக வழங்கி வருகிறார். குன்னம் தொகுதி செந்துறை பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசு போக்கு வரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கடந்த சில ஆண்டுகளாக 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவிகள் பயன் பெறும் வகையில் தேர்வை வெல்வோம் வினா-விடை புத்தகங்களை தனது சொந்த செலவில் வழங்கி வருகிறார்.

அதன்படி இந்த ஆண்டு இரண்டாம் கட்டமாக குன்னம் தொகுதியில் பெரியாகுறிச்சி, பொன்பரப்பி, சோழன்குடி காடு, குறிச்சிகுளம், மனப்பத்தூர்,குழுமூர், சன்னாசிநல்லூர், அங்கனூர்,தளவாய், முள்ளுக்குறிச்சி, கீழப்பெரம்பலூர் உள்ளிட்ட அரசு பள்ளியில் படிக்கும் 1708 அரசு பள்ளி மாணவர்களுக்கு புத்தகங்களை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கலந்து கொண்டு மாணவிகளுக்கு தேர்வை வெல்வோம் வினா விடை புத்தகங்களை வழங்கி தொடங்கி வைத்து மாணவிகள் இடையே உரையாடினார்.

அப்போது அவர் இந்த புத்தகங்களை உங்களுக்கு வழங்குவதற்கு காரணம் நீங்கள் நல்லமுறையில் படித்து பள்ளி இறுதி தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று உயர்கல்வி படிக்க வேண்டும். அப்படி நன்கு படித்து கல்வியில் சிறந்த வர்களாக வரவேண்டும்.

படித்த மாணவ, மாணவியர்களுக்கு தமிழ்நாடு முதல்வர் ஏற்படுத்தி தரும் வேலை வாய்ப்புகளை பெருவதற்கு நீங்கள் நல்ல கல்வி அறிவு பெற வேண்டும் என்று தான் இந்த கையடக்க வினா-விடை புத்தகங்களை உங்களுக்கு வழங்குகிறேன் இதனை நன்கு பயன்படுத்தி படித்து நல்ல வேலையில் சேர்ந்து நமது மாவட்டத்திற்கு மரியாதை ஏற்படுத்தி தரவேண்டும்.

உங்களுக்கு கல்வி கற்று தருகின்ற ஆசிரியர்களுக்கும் பெருமை ஏற்படுத்தி தரவேண்டும். உங்கள் பெற்றோரின் உழைப்புக்கு பலன் பெற்று தர வேண்டும். உங்கள் கல்வி உங்களுக்கு மாத்திரம் அல்லாது உங்களை சார்ந்தவர்களுக்கே உதவக்கூடிய ஒரு ஆயுதம், அதை நல்ல முறையில் பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன் என்று மாணவ, மாணவியர்களிடம் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி. எழில் மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பேராசிரியர் அருள், மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் ஆதி.இளங்கோவன், மாவட்ட அமைப்புசார ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் செல்வம், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள் ரமணி, இலக்கியா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் மாரிமுத்து, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சித்ரா கழக நிர்வாகிகள் ஆனந்த், சுந்தர், மற்றும் மாவட்ட, ஒன்றி கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் ஆலோசனைப்படி 106கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி சார்பில். நம்பியூர் ஒன்றியத்தில் ஒன்றிய கழகச் செயலாளரும், நம்பியூர் பேரூராட்சி மன்ற தலைவருமான மெடிக்கல் பா.செந்தில் குமார் தலைமையில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ச.செந்தில்குமார் முன்னிலையில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ஆ.பூர்ணசந்திரன் ஏற்பாட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பச்சிளம் குழந்தைகளுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் தாய்மார்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. மேலும் புதுசூரிபாளையம் அங்கன்வாடி மையத்திற்கு இரண்டு மின்விசிறிகள், குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் கீதா முரளி, கோபி சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் கதிரவன், வினோத், சங்கவி, நம்பியூர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சீனிவாசன், ரகு, நம்பியூர் பேரூராட்சி ஒருங்கிணைப்பாளர் கலைஞர் கதிரேசன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தீபா தமிழ்செல்வன், மைக் பழனிசாமி, உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.